# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 01.04.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 11274/SCIC/2023**

திருமதி பா. ரதியம்மாள் மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
திண்டுக்கல். ... பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 13.02.2023 தேதியிட்டு, பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், திண்டுக்கல் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில், எதிர்மனுதாரரின் முன் ஆவண எண்.3448/1950ல் உள்ள சர்வே எண் விவரம், மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட நான்குமால் விவரங்கள், முன்ஆவணத்தைக் கொண்டு சாணார்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.898/2002ன் பதிவு ஆவணத்தில் உள்ள சர்வே எண் என்பன போன்ற விவரங்களை 3 இனங்களில் தகவல்களாக வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 20.02.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 24.03.2023 தேதியிட்டு பிரிவு 19 (1)-ன்கீழ் முதல் மேல் முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரால் 06.04.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் மனுதாரர் சட்டப்பிரிவு 19 (3)-ன்கீழ் 24.06.2023 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 11274/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு 21.11.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் மேல்முறையீட்டு 09.12.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மனுதாரர் 31.12.2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபனை கடிதம் அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 01.04.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் சார்பில் அவரது கணவர் திரு பாண்டியராஜன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு த. மகேஷ். பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவாளர் அலுவலகம், திண்டுக்கல் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. பொதுத் தகவல் அலுவலரால் 20.02.2023, 06.04.2023, 02.01.2024 மற்றும் 09.12.2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக விசாரணையின்போது தெரிவித்தார். அதற்கு இனம் 3க்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரரால் அங்கீகரிக்கப்பட்ட அவரது பிரதிநிதி விசாரணையின்போது தெரிவித்தார். இனம் 3ல் ஆவண எண்கள் 3448/1950 மற்றும் 898/2002ல் குறிப்பிடப்பட்டுள்ள இரு சொத்துக்களும் ஒத்துப்போகிறதா அல்லது மாறுபட்ட சொத்துக்களா என்பதற்கான விவரம் கோரப்பட்ட நிலையில், அதுகுறித்து பொதுத் தகவல் அலுவலரால் 02.01.2024 தேதியிட்டு வழங்கப்பட்ட தகவல்கள் தவறானது என்றும் விசாரணையின்போது தெரிவித்தார்.

5. எனவே, பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் மனுவில் கோரிய இனம் 3க்கு அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் திருத்திய / சரியான தகவல்களை 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன், தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையையும் ஆணையத்திற்கு

அனுப்பிவைக்குமாறு உத்தரவிடப்பட்டு, **இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 11274/SCIC/2023</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
திண்டுக்கல்.

**<u>மனுதாரர்:-</u>**
திருமதி பா. இரதியம்மாள்,
க/பெ பாண்டியராஜன்,
குரும்பபட்டி, கூவனூத்து அஞ்சல்,
திண்டுக்கல் கிழக்கு தாலூகா,
திண்டுக்கல் மாவட்டம் 624 003

Copy to: File TK/PS